
# காசி பஞ்சகம்

## (ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)



ப்ரக்ஞன்

## நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | காசி பஞ்சகம் |
| **ஆசிரியர்** | : | ப்ரக்ஞன் |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **வகை** | : | விழிப்புணர்வு |
| **முதற்பதிப்பு** | : | 2023 |
| **பக்கங்கள்** | : | 58 |
| **விலை** | : | அக விழிப்பு |
| **கணினி அச்சு** | : | ஓம் கிராபிக்ஸ் |

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | முகவுரை | 05 |
| 2. | ஸ்லோகம் 01 | 10 |
| 3. | ஸ்லோகம் 02 | 22 |
| 4. | ஸ்லோகம் 03 | 33 |
| 5. | ஸ்லோகம் 04 | 41 |
| 6. | ஸ்லோகம் 05 | 47 |
| 7. | நிறைவுரை | 54 |

# காசி பஞ்சகம்

**(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)**

தெளிவுரை

**ப்ரக்ஞன்**

# முகவுரை

சனாதன தர்மத்தின் வழி வந்த நம்முடைய ஹிந்து பாரம்பரியம் தர்மம், பக்தி, கர்மம், மற்றும் தத்துவம் அல்லது வேதாந்தம் என்ற மூன்றையும் ஒருங்கிணைத்துக் கொண்டு போகிறது என்பதுதான். மேற்கத்திய மதங்கள் பக்தியையும், ஆசார அனுஷ்டானங்களையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டவைகள்.

நமது பாரம்பரியம் வேதாந்தத்தை அடிப்படையாக கொண்டிருக்கும் பொழுது, கர்மங்களையும் தேவையான அளவிற்கு ஒத்துக் கொள்கிறது. யாராலும் கர்மங்கள் ஆற்றாமல் இருக்க முடியாது.

அதேசமயம், கர்மங்களை இரண்டு விதமாக பிரித்துப் பார்க்கிறது. **'காமிய கர்மங்கள்'** **'நிஷ்காமிய கர்மங்கள்'** என்று இரண்டாக வகுத்துக் கொண்டுள்ளது.

இதில், காமிய கர்மங்கள் என்பவை பலனை எதிர்பார்த்து செய்யப்படும் கர்மங்கள். நிஷ்காமிய கர்மங்கள் தவிர்க்க முடியாத நித்திய கர்மங்கள்.

அவைகள், பலனை எதிர்பார்த்து செய்யப்படும் கர்மங்களல்ல. இதை பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தமது பகவத் கீதையில் இந்த இரண்டு பிரிவினையைப் பற்றி எடுத்துக் கூறுகின்றார். அவரைப்போலவே, பகவான் ஸ்ரீஆதிசங்கரரும் கர்மம் செய்யாமல் இருக்க முடியாது. ஆனால், அது கர்ம யோகம் என்பதாக இருக்க வேண்டும் என்கின்றார்.

அதுப்போலவே, பக்தியையும் நமது பாரம்பரியம் தனது வேதாந்த சாஸ்திரங்களில் இணைத்து கொண்டு போகிறது.

मां च योऽव्यभिचारेण भक्तियोगेन सेवते ।
स गुणान्समतीत्यैतान्ब्रह्मभूयाय कल्पते ॥१४- २६॥

மாம் ச யோऽவ்யபி4சாரேண ப4க்தியோகே3ந ஸேவதே |
ஸ கு3ணாந்ஸமதீத்யைதாந்ப்3ரஹ்மபூ4யாய கல்பதே || 14 – 26||

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தமது பகவத்கீதையில் கூறும் போது, எவனொருவன் என்மீது அசைக்க முடியாத பக்தி கொண்டுள்ளானோ? அவன் சத்வ, ரஜோ, தமோ குணங்களின் பிடியிலிருந்து தப்பிக்கிறான். அவனே பிரம்மமாகிறான் என்கிறார்.

இது தான் நிஷ்காமிய பக்தி. பலனை எதிர்பாராத பக்தி. இப்படிப்பட்ட பக்தியின் வழியாக மட்டுமே, ஒருவனால் ஆத்ம சாக்ஷாத்காரம் அடைய முடியும்.

அதுவே, தத்துவத்தை அடிப்படையாகக் கொள்ளாமல், வெறும் பக்தி மட்டும் இருந்தால், அது மூட நம்பிக்கைகளின் கூடாரமாகி விடும்.

ஆகவே, பக்தியும், ஞானமும் இணைந்து 'பக்தி யோகம்' ஆகின்றது. இதை அன்றைய சமுதாயத்திற்கு செய்ததுதான், பகவான் ஸ்ரீ ஆதிசங்கரரின் மிகப் பெரிய வெற்றி என்றும் கூறலாம்.

வைதீக நெறியிலே மேற்கொள்ளப்பட்ட புறச்சடங்குகள் எனும், கர்ம காண்டத்திலுள்ள களைகளை எல்லாம் நீக்கி, பக்தியையும், அதன் அழத்தையும், எந்தவிதமான எதிர்ப்பார்ப்பும் இல்லாத நிஷ்காமிய நிலைக்கு உயர்த்தி, அதை பொருட் செறிவுள்ளதாக மாற்றி, அந்த தத்துவங்களுக்கு வியாக்கியானம் இயற்றியதுதான் ஸ்ரீ சங்கரரின் உயரிய நோக்கம்.

பொதுவாக, இந்த மதம் என்ற நமது பண்டைய பாரம்பரியம் புராணங்களிலும், இதிகாசங்களிலும் உள்ள வார்த்தைகளுக்கு மட்டும் அர்த்தம் கற்பித்ததென்றால், அது பகுத்தறிவிற்கு பொருந்தாதது ஆகிவிடும். அதேசமயம், அந்த வார்த்தைகளில் மறைந்து கிடக்கும், அதன் உட்பொருளை (அ) அதன் தத்துவங்களை வெளிக் கொணர்வது மட்டும்தான், உண்மையில் **ஆன்மீகம்** என்றும் சொல்லப்படுகிறது.

காசிக்கு போனால் புண்ணியம். காசியில் இறந்தால் முக்தி என்பது, எல்லா இந்துக்களின் நம்பிக்கை ஆகும். அத்துடன், தீபாவளியன்று '**கங்கா ஸ்நானம் ஆச்சா**' என்றுதான் கேட்பது நமது வழக்கம். அப்படியென்ன, கங்கைக்கும், காசிக்கும் அவ்வளவு முக்கியத்துவம்?

கங்கையில் குளித்தால், நம் உடல் அழுக்கு வேண்டுமானால் போகலாம். அதனால், புண்ணியம் எப்படி கிடைக்கும்? இதன் உண்மையான தாத்பரியம் என்ன? இதை ஆராய்ந்த ஸ்ரீசங்கரரின் அருமையான நூல்தான் இந்த காசிபஞ்சகம் ஆகும்.

ஆகவே, காசிக்கு போனால் புண்ணியம். காசியில் இறந்தால் முக்தி என்ற இந்த வசனங்களுக்கு பின்னால் உள்ள ஆழமான தத்துவார்த்தங்களை நாம் அறிந்துக் கொள்ள வேண்டும்.

அப்படிப்பட்ட தத்துவங்களை வெளிக்கொண்டு வருவது தான் **காசிபஞ்சகம்** என்ற இந்த நூலை இயற்றிய பகவான் ஸ்ரீஆதிசங்கரரின் மிக உயரிய நோக்கமாகவும் இருந்திருக்க வேண்டும்.

காசி நகரம் மிகவும் புராதனமானது. தேவி பார்வதி அன்னபூரணியாக அவதாரம் எடுத்து, மக்களின் பசியை போக்கிய நகரம். குறுகிய தெருக்களும், மக்கள் கூட்டமும் கங்கை நதியில் அனேக படித்துறைகளையும் கொண்ட நகரம். அந்த நகரின் தத்துவார்த்தங்களை ஸ்ரீஆதிசங்கரர் **காசிபஞ்சகம்** எனும் ஐந்தே ஐந்து சுலோகங்களில் விளக்கிக் கூறுகிறார்

## சுலோகம் 1

मनोनिवृत्तिः परमोपशान्तिः
सा तीर्थवर्या मणिकर्णिका च
ज्ञानप्रवाहा विमलादिगंगा
सा काशिकाऽहं निजबोधरूपा ॥१॥

**மனோநிவ்ருத்தி: பரமோப சாந்தி:**
**ஸா தீர்த$_2$வர்யா மணிகர்ணிகா ச**
**ஜ்ஞான ப்ரவாஹா விமலாதி$_3$ க$_3$ங்கா$_3$**
**ஸா காசிகா (அ) ஹம் நிஜபோ$_3$த$_4$ரூபா || 1 ||**

Mano nivruthi paramopa santhi,
Sa theerthavarya mani karnika cha,
Gnana pravaha vimaladhi ganga,
Saa kasikaham nija bodha roopa. ||1 ||

## பொருள்

எண்ணங்களற்ற அமைதி நிலையில், அந்த அறிவை உணர்கின்ற உயரிய உன்னதமான மனமே மணிகர்ணிகா படித்துறை ஆகும். மாசற்ற, அளப்பற்கரிய ஞான வெள்ளமான கங்கை நதி, மனதில் உள்ள அறியாமை மலங்களை நீக்கி சுத்தம் செய்து விடுகின்றது. அத்தகைய காசியே என்னுடைய ஞானமயமான நிஜ சொரூபம்.

## விளக்கவுரை

'**காசியில் மரணமடைந்தால் முக்தி**' என்று நம் முன்னோர்கள் கூறுவார்கள். ஏன்? இதற்கு விடை காண வேண்டுமென்றால் '**மரணம்**' என்றால் என்ன? என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும்.

பொதுவாக, இந்த பூதவுடலின் அழிவுதான் மரணம் என்று, நாம் சாதாரணமாக நினைக்கிறோம். ஆனால், அந்த ஸ்தூல உடலாகிய பௌதீக உடலாகிய பூதவுடல் அழியும் போது, நம்மிடம் உள்ள சூக்குமமான இந்த 'நான்' மட்டும் அழிவதில்லை. அந்த 'நான்' இன்னொரு பூதவுடலை தேடிப் போகின்றது. அதனால்தான், மீண்டும், மீண்டும் பிறக்கிறோம், இறக்கிறோம்.

ஆகவே, மறு பிறப்பில்லாத ஒரு இறப்பு ஏற்படுவது காசியில் மட்டும்தான் என்று, நம் முன்னோர்கள் கூறினார்கள் என்றால், அதன் ஆழமான உட்பொருளை நாம் அறிந்துக் கொள்ள வேண்டும்.

அப்படி காசிக்கு என்ன சிறப்பு?

இங்கு புனித கங்கை ஓடுகிறது. அதன் பிராவஹம் ஞானப்பிரவாகம் போல. நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கின்றது. அத்தகைய காசியில்தான் அனேக படித்துறைகள் உள்ளன. இந்த படித்துறைகளில்தான் அழிந்துப் போன பூதவுடலை எரித்து, அதன் சாம்பலை கொண்டு சென்று கங்கையில் கரைக்கிறோம். இது, இன்றைய பெரும்பாலானவர்கள் நடைமுறை வாழ்க்கையில், நடைப்பெறுகின்ற நிதர்சனமான உண்மை.

இவ்வாறு, நாம் கண்கூடாகக் காணும் அந்த உண்மை களுக்கு பின்னால், ஒழிந்துக் கொண்டிருக்கும் தத்துவார்த்த உண்மையை பகவான் ஸ்ரீஆதிசங்கரர் மிகுந்த கவிதை நடையில், இந்த காசிபஞ்சகம் முதல் சுலோகத்திலேயே, தான் கூறவருவதை, மிகவும் தெள்ளத் தெளிவாக கூறுகிறார்.

மனோ நிவ்ருத்தி, பரமசாந்தி, மணிகர்ணிகா, விமலாதி கங்கா, ஞானபிரவாகம் என்ற ஐந்து வார்த்தைகளின் வழியாக, நமது பாரம்பரியத்தின், இந்து மதத்தின் அடிப்படை தத்துவத்தை புரியவைக்கிறார் பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர்.

கங்கை நதிக்கரையில், அனேக படித்துறைகள் இருந்தாலும், அதில் மணிகர்ணிகா எனும் படித்துறையில்தான் பூதவுடலை எரித்த சாம்பலை கரைக்க வேண்டுமென்று, நமது முன்னோர்கள் கூறியிருக்கின்றனர்.

அது ஏனென்றால், மணிகர்ணிகா படித்துறையில் இறந்த நம் முன்னோர்களின் சாம்பலை கரைத்து விட்டு, அங்கு ஓடும் கங்கையில் குளியல் செய்தால், நம் உடலில் உள்ள அழுக்குகள் மட்டுமின்றி, மனதிலுள்ள அத்தனை அழுக்குகளும் நீங்கி மனம் தூய்மை அடைவதினால், அது, ஆசாபாசங்கள் ஏதுமற்ற, உண்மையான ஞான சாக்ஷாத்காரம் அடைந்து விடும்.

அந்த மாசற்ற கங்கை நதி, நமது மனதிலுள்ள அழுக்குகளையும் அழித்து விடும். மனம் அசைவற்று நிக்ஷலமாகிவிடும். இதைத்தான் மனோ நிவ்ருத்தி என்கிறார் ஸ்ரீசங்கரர்.

அது எப்படி, கங்கையில் குளித்தால், உடல் அழுக்கு போகலாம். மன அழுக்கு எப்படி போகும்?

நமக்கு மிகவும் வேண்டியவரின் மரணம், அவரது உடலின் தகனம், அதன் வாயிலாக மனம் அடையும் சலனம் ஆகிய இவைகளின் வாயிலாக, நிலையற்ற மனித வாழ்வின் எதார்த்தத்தை, நமக்கு புரிய வைக்க நடக்கின்ற ஒரு மகத்தான நிகழ்வு என்று கூறலாம்

அப்பொழுது, நம் மனதில் ஏற்படுகின்ற தெளிவு, **’பொய்யுடல் எதுவென அறிந்தேன், இனிமேல் மெய்யுடல் தேடி, என்றும் அழியாத, அந்த ஆத்ம சொரூபத்தை அடைய, அம்மா, கங்கா தேவி, நீயே எனக்கு உண்மை அறிவை உணர்த்துவாயாக. என் மனதின் அறியாமைகளை அகற்றுவாயாக. ஆகவே, உன்னுளே யான் மூழ்கி, என்றும் நிலையான அறிவு ஒளியை வேண்டுகின்றேன்’** என்ற வெளிபாடுதான், உண்மையில் இந்த கங்கா ஸ்நானம் என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளார்கள்.

மணிகர்ணிகா எனும் படித்துறையில்தான், எல்லா உடல்களும் எரித்துச் சாம்பலாக்கப்படுகின்றன. அந்த அமளியிலும் கூட, அமைதியாக ஓடிக்கொண்டிருக்கும் கங்கை நதியை பார்க்கின்ற பொழுது, இறந்தோர் உடல்கள் எரிந்து, சாம்பலானவுடன், அங்கே அக்கடமைகளைச் செய்பவர்

எல்லோருக்கும், மரணத்தில் மனிதன் அடையும் ஒரு மிகப் பெரிய விடுதலையை அறிகின்ற தெளிவு, ஒரு சிலருக்கு, ஒரு சில நொடிகளுக்காவது, வருவது உறுதி.

அதனாலேயே, பகவான் ஸ்ரீஆதிசங்கரர், மணிகர்ணிகா படித்துறையினை, அனைத்து துயரங்களுக்குக் காரணமான அறியாமையையும், ஆசையையும் முற்றும் அழித்து, நல்ல அமைதி பெற்ற மனதிற்கு உவமையாகக் கூறுகிறார்.

மணிகர்ணிகா படித்துறை, **'உடலே யான்'** எனும் மயக்கத்தை அறுக்கின்ற தத்துவ பூமியாகும். **'தேஹம் நாஹம் கோஹம் சோஹம்'** எனும் மந்திரத்தின், ஒரே வரியில் மிகவும் முக்கியமானதும், இரகசியமானதுமான வேதாந்த சாரத்தை வெளிப்படுத்தித் தருகின்றது இந்த மணிகர்ணிகா படித்துறை என்பதினால், அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்.

தேஹம் என்பது உடல். அதனால், **'நான் இந்த உடல் தான்'** என்றே, நம்மில் பலரும் அறியாமையால் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த அறியாமையினாலேதான் நமக்குள் வேறுபாடுகளும், விருப்பு வெறுப்புக்களும் உண்டாகின்றன. அத்துடன், பிறந்து, வளர்ந்து, தளர்ந்து, சிதைந்து போகின்ற உடலினால் பெரும் துயரங்களும் அடைந்து தவிக்கிறோம்.

ஒருவரின் இறப்பினைப் பார்க்கும் போதாவது, ஒரு சில நொடிகளாவது, மனதிற்குள், உடல் என்பது நிலையற்றது என்னும் எண்ணம் எழுகிறது.

அவ்வெண்ணம் ஆழமாகும்போது, பகுத்தறிவு விரிகிறது. அதனால், மனதை மேலும் ஆராயும்போது, நம் கண்களுக்குத் தெரியும் நமது வல்லுடல் – ஸ்தூல சரீரம், வெறும் பிண்டம் என்பதும், இதற்குத் துணையாக, பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம் எனும் கோசங்கள் மூச்சு, மனம், புத்தி ஆகியவற்றின் கூட்டாக நம் கண்களுக்குத் தெரியாத மெல்லுடல் – சூக்ஷ்ம சரீரம், என்ற ஒன்றும் நமக்குள் இருக்கிறது என்றும் அறிகிறோம்.

ஆனால், இந்த மெல்லுடலும் அழிய வேண்டியதே! என்றாலும், இந்த வல்லுடல் அழியும்போது, இந்த மெல்லுடல் மட்டும் அழியாமல், வேறொரு வல்லுடலில் புகுந்து, மீண்டும், மீண்டும் பிறவி எனும் பிணியில் சிக்கித் தவிக்கின்றதே! இவ்வாறு, இந்த மெல்லுடம் அழியாமல் இருப்பதற்குக் காரணம் என்னவெனில், மனதில் நாம் ஏற்றி வைத்துக் கொண்டுள்ள ஏராளமான ஆசைகள் என்பதை, நம் சனாதன தர்மத்தின் வழிவந்த எல்லா தர்ம நூல்களும், பெரியவர்களும் தரும் உண்மைகளைப் படித்தும், கேட்டும் உணர்கிறோம்.

ஆனால், இந்த வல்லுடலாகிய பூதவுடல் அழிவதற்கு முன்னதாகவே, இந்த வல்லுடலோடு இருக்கும்போதே, மெல்லுடலாகிய சூக்ஷ்ம சரீரம் மட்டும் அழிந்து விட்டால் அதுதான் முக்தி. அந்த முக்தியை தருவதுதான் மணிகர்ணிகாவும், புனித கங்கையும் காசி மாநகரமும் ஆகும்.

ஆகவே, ஆசைகளற்ற நிலையில், அதன் காரணமாக விளையும் எந்த விதமான செயல்களையும், செய்ய இயலாத மனம், அதாவது, முற்றிலும் அமைதியை அடைந்த மனம்தான் மணிகர்ணிகா எனும் படித்துறை என்றும், அங்குதான் அஞ்ஞானங்கள் அழிந்து ஞானம் பிறக்கிறது என்றும் இந்த பாடலின் வாயிலாக பகவான் ஸ்ரீ சங்கரர் கூறவருகிறார்.

ஆக, நான் என்பது இந்த பௌதிக உடல் (ஸ்தூல உடல் அல்ல). நான் என்பது இந்த மனம் அல்ல (சூக்ஷ்ம உடலும் அல்ல). என்ற உணர்தல் ஏற்படுவது, இந்த மணிகர்ணிகா (மனதில்தான்) படித்துறையில்தான் என்கின்றார்.

பிறந்தும், வளர்ந்தும், மாறியும், அழிவதுமான இந்த உடலில், 'நான் மட்டும் மாறாமல் இருக்கிறேனே' எனும் அறிவின் வியப்பு எப்போதேனுமாவது மனதில் தோன்றும்.

அவ்வியப்பே, ‘நான் இத்தகைய, மாறி, மாறி அழியும் உடலில் மாட்டிக் கொள்ளும் காரணம் என்ன?’ எனும் வினாவையும் எழுப்பும்.

இவ்வாறு, இந்த மெல்லுடலும், வல்லுடலும் வழக்கத்தில் இருப்பதற்கு காரணம் என்ன? என்று கேட்டு, அதில் ‘நான் யார்?‘ என்று நாம் ஆராயும் பொழுது, அதற்கான ‘காரண உடல்’ என மற்றொரு உடலும் எனக்கு இருக்கிறது. அந்தக் காரண உடல், நமது அறியாமையாலும், ஆசைகளாலும் செய்யும் செய்வினைகளின் (கர்மங்களின்) விளைவுகளாலும், (கர்ம பலன்களாலும்) விதைக்கப்பட்டு, முளைவிட்டு, செழித்து வளர்கிறது என்றும் அறிகிறோம்.

அதனால், உடல் என்பது, வெறும் பௌதீக உடல் மட்டுமல்ல. அது வல்லுடல், மெல்லுடல், காரணவுடல் எனும் இந்த மூன்றும் சேர்ந்ததுதான் என்பதும் தெரிகின்றது.

‘தேஹம் நாஹம்’ எனும் வாக்கியம், இம்மூன்று உடல்களும் நான் அல்ல! என்று உணர்த்துகின்றது.

அப்படியானால், உண்மையில் நான் யார்? என்ற கேள்வியையும் நமக்கு எழுப்புகிறது.

**நான் யார்? கோ அஹம்?**

என்ற இந்தப் பெரிய கேள்விதான் பகவான் ஸ்ரீரமண மகரிஷியை நமக்குக் கொடுத்தது. இக்கேள்விக்கு விடை தேடுவது என்பது, **‘தேஹம் நாஹம்’** எனும் **‘நான் உடல் அல்ல!’** என்ற வாக்கியத்தை முற்றும் உணர்வதிலேயே அடங்கி இருக்கிறது.

மணிகர்ணிகா படித்துறையிலே செய்கின்ற உடல் தகனம் என்பது, தேஹம் நாஹம் எனும் மந்திரத்தின் மூலம், உடலாசைகளை இழத்தல், அதனால் மனதின் ஆசைகளை அழித்தல் என்பதற்கு, உவமை என்று காட்டுகின்றார் பகவான் ஸ்ரீஆதிசங்கரர்.

ஸ்தூல உடலை எரித்துவிட்டு, அந்த படித்துறையில் புனித நீராடும் பொழுது, அம்மா! கங்கா மாதா, உன்னுடைய ஸ்பரிசத்தால், எனது அழியக்கூடிய உடல் அழுக்குகளெல்லாம் அழிந்து, அந்த உடல் தூய்மையாவதுப் போல, என்னுடைய மனதின் அறியாமை அழுக்குகளும் நீங்கி, நான் தூய்மை அடைய வேண்டும்.

அதாவது, எத்தனை அசுத்தங்களை நீ உன்னுள் உள்வாங்கினாலும், உன்னுடைய புனிதத்தன்மை சற்றும் பாதிக்காமல் இருப்பதுப்போல, உன்னில் நீராடும் என்னிடம் உள்ள அசுத்தங்களை எல்லாம் அகற்றி விடுவாயாக! என தன்னுடைய அறியாமை மன அழுக்குகளையும் சேர்த்து நீக்கும்போது, அந்த கங்கை நதிப் போல, என்னுள் ஞானப்பிரவாகம் பெருக்கெடுத்து ஓடும்.

அப்பொழுது ஏற்படும் தன்னுணர்வுதான் ஆத்ம சாக்ஷாத்காரம். அந்த ஆத்மாதான் என்றும் எப்பொழுதும் ஒளி உமிழ்ந்து கொண்டிருக்கின்ற காசி நகரம். நிஜ போத சொரூபமே (ஆத்மாவே) காசி மாநகரம். ஆகவே அந்த காசியைக் கண்டால் முக்தி உறுதி.

அந்த காசியை அடைவதற்கு ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்ய வேண்டியதில்லை. இருந்த இடத்திலேயே மனதை தூய்மைப்படுத்தி மாசற்றதாக்கி – விமல கங்கையாக்கி, நிஜ போத சொரூபத்தை உணர்ந்து விட்டால், நாம் காசியை அடைந்து விட்டவர்களாகி விடுவோம் என்கிறார் பகவான் ஸ்ரீஆதிசங்கரர்.

இந்த முதல் பாடலிலே, காசியின் பெருமையை ஸ்ரீஆதிசங்கரர் மிகுந்த கவி நயத்துடன் விளக்குகின்றார். மணிகர்ணிகா, விமல கங்கை, ஞானப்பிரவாகம், காசிநகரம் என்ற நான்கையும் இணைக்கும் முதல் பாடல் ஒன்றை மட்டுமே, நாம் புரிந்துக்கொண்டு விட்டால், உண்மையான தீர்த்த யாத்திரை என்பது, நம் மனதில் உள்ள அழுக்குகளை போக்குவதற்காக நடைப்பெற வேண்டியது என்பது, நமக்கு புரியவரும்.

அதை ஏதோ, கடனுக்கு, கடமைக்கு என செய்யாமல், முழுமையான ஆன்ம அறிவுச் சாதனையாக செய்யும்போது, அதுவே ஆத்ம சாக்ஷாத்காரத்திற்கு வழி வகுக்கும்.

இந்த ஒரு பாடல் போன்றே, மற்ற பாடல்களையும் பொருள் புரிந்துக் கொள்ளும்போது, தீர்த்த யாத்திரை என்பது, வெளியில் எதுவும் செய்யாமலேயே, நம் உள்ளே நடைப்பெற வேண்டிய, சத்திய சாக்ஷாத்காரம் எனும் உண்மையை நாம் உணரவும் முடியும். அந்த கங்கை நதிப் போன்ற புனித நிலையை நாம் அடைய முடியும் என்பதும் விளங்கும்.

## சுலோகம் 2

यस्यामिदं कल्पितमिन्द्रजालं
चराचरं भाति मनोविलासम्।
सच्चित्सुखैका परमात्मरूपा
सा काशिकाऽहं निजबोधरूपा ॥२॥

**யஸ்யாமித$_3$ம் கல்பிதமிந்த்$_3$ரஜாலம்**
**சராசரம் பாதி மனோவிலாஸம் |**
**ஸச்சித்ஸூகை$_2$கா பரமாத்மரூபா**
**ஸா காசிகா (அ) ஹம் நிஜபோதரூப || 2 ||**

Yasyamidham kalpithamindra jalam,
Characharam bathi mano vilasam,
Sachid sukhaika parmathma roopa,
Saa kasikaham nija bodha roopa. || 2 ||

## பொருள்

தோற்றத்திலுள்ள யாவும், மனதின் இந்திரஜாலம்தான் என்றாலும், அவைகள் மனதில் எழுகின்ற எண்ணங்களால் உண்டாகின்ற கற்பிதம்தான் என்றாலும், அவ்வாறு, அவைகள் மனதிற்கு தோன்ற வேண்டுமானால், அந்த மனதிற்கு ஆதாரமான அறிவாகிய ஆத்மா இருப்பதினால்தான் அவைகள் சாத்தியம், என்ற பேருண்மையை நாம் உணரும்போது மட்டும்தான், கற்பனையில் தோன்றும் உருவங்கள் முதலான இந்த பிரபஞ்சமும் உண்மையில் இருப்பது பரமாத்ம ரூபமான ஆத்மா இருப்பதினால்தான் என்பதும் புரியவரும்.

உண்மையில், அது ஒன்றுதான் நிஜ போத ஸ்வரூபம். அதுதான் காசி மாநகரம்.

## விளக்கவுரை.

கண்களல் காணும் இந்த பிரபஞ்சமும், அதில் தோன்றி மறையும் உயிரினங்களும் மனதின் வெறும் கற்பனையே. அந்த பிரமைக் காட்சிகள் தோன்றுவதோ? மனதின் இந்திர ஜாலத்தால்தான். அவையெல்லாம் தோன்றுவது, நம் போத ஸ்வரூபம் இருப்பதினால்தான்.

அதாவது, ஒரு திரைப்படத்தை நாம் ஒன்றுமற்ற வெள்ளைத் திரையில் காண்கின்றோம். அதில் மனிதர்களும் மற்ற அசையும், அசையாப் பொருட்களும் வருகின்றன, போகின்றன. அத்துடன், அவைகள் அழுகின்றன, சிரிக்கின்றன.

இந்தக் காட்சிகள் எல்லாம் சினிமா புரொஜக்டரை நிறுத்தும் பொழுது, அந்த திரை வெறுமையாக, வெண்மையாக காட்சியளிக்கின்றது. அங்கு எதுவும் இல்லை.

அதுப்போல, நம்முடைய மனம் அமைதியடைந்து, தனது ஆசைகளால் உண்டாகிற செயல்களை நிறுத்திக் கொள்ளும் போது, அங்கு மாசற்ற வெண்மை திரை மட்டும்தான் காணப் படுகிறது. அது தான் **நிர்மலமான ஆத்மா.**

அதுவரை, நாம் கண்ட காட்சிகளெல்லாம் அந்த ஆத்மா (அறிவு) இருப்பதினால், அதன் வாயிலாக மனதின் உருவான காட்சிகள். மனமெனும் அவித்யையால் (அறியாமையால்) உருவாக்கப்பட்ட பிரமைகள்தான் இவைகளெல்லாம்.

உண்மையில், உருவங்கள் எதுவுமே அந்த திரையில் இல்லை. அந்த திரை மட்டும்தான் உண்மை. அதுப்போல, ஆத்மா மட்டுமே உண்மை. அதன்மீது, அறியாமையினால்,

இந்த மனம் ஏற்றி வைத்துக் கொண்டவைகள்தான் இந்த உலகம் என்ற உருவங்களெல்லாம்.

எனவே, தோன்றி, மறையும் உருவங்கள் எதுவும் உண்மையில்லை. நித்தியமுமில்லை. அவைகள் எல்லாம் ஓடி மறையக்கூடிய திரைப்படக் காட்சிகள் போன்றதுதான்.

அவ்வாறே, நாம் காணும் கனவுக்காட்சிகளும் இது போலத்தான். நாம் காணும் கனவில் நமக்குள்ளேயேதான் மழை பெய்கிறது. நமக்குள்ளேயேதான் வெயில் அடிக்கிறது. அதிலேயேதான் நாம் அழுகிறோம், சிரிக்கிறோம், நடக்கிறோம், ஓடுகிறோம், நிற்கிறோம், உட்காருகிறோம், ஏன்? சண்டைகூட போடுகிறோம், அல்லது நட்பு பாராட்டுகிறோம்.

இவைகள் எல்லாமே நமது உறக்கம் கலைந்து விழித்தெழுந்திருக்கும் வரைதான். நாம் விழித்து எழுந்து விட்டால், நாம் நாமாக இருக்கிறோம்.

அதுப்போல, அவித்யை எனும் இருள் நம்மை பிடித்துக் கொண்டிருக்கும் வரைதான், இந்த பிரபஞ்சமும், அதன் அனுபவங்களும் நமக்கு இருக்கும். அவித்யை எனும் இருள் அகன்று விட்டால், மீதமிருப்பது மாசற்ற பேரொளியாகிய ஆத்மா மட்டும்தான் இருக்கும்.

ஆனால், இந்த உலகம் எனும், பிரபஞ்ச வாழ்வில் கனவு நிலையிலிருந்து விழிப்பு நிலைக்கு – ஜாக்ரத் நிலைக்கு – வரும்பொழுது, ‘நான்’ எனும் அஹமும் விழித்துக் கொள்கிறது. அதிலே, ‘நான்’ என்பது, இந்த உடல்தான் என்று மனம் நம்ப ஆரம்பித்து, அதன் விளைவுகளை இன்ப, துன்பங்களாக அனுபவிக்கின்றது.

இதெல்லாம் மனதின் சேஷ்டைகள்தான். மனோ விகாரங்கள்தான். ஆக, எல்லாமே, மனதின் லீலைகள்தான். மனம் எவ்வாறு கனவில் சில உருவங்களைப் படைத்துக் கொண்டு, அவைகளை உண்மையென்று கருதிக்கொண்டு, இன்ப, துன்பத்தை அடைகின்றதோ? அதுப்போல, நினைவிலும் மனம் ஓட்டுகின்ற திரைப்படம்தான் இவைகள் எல்லாம் என்பதை நாம் உணர வேண்டும்.

அதே மனம் ஆழ்ந்த உறக்கத்தில் ஒரு உருவத்தையும் உண்டாக்காமல் ஓய்வு நிலையில் ஒடுங்கி விடுவதையும் நாம் அறிய முடிகின்றது. ஆகவே, நாம் காணும் உருவங்கள் எவையும் உண்மையல்ல.

பிறகு, உண்மைதான் என்ன?

**அதுதான், சத் சித் ஆனந்தம்.**

சத்சிதானந்தம் தருகின்ற ஆனந்தம் மட்டும்தான் நித்தியம், நிரந்தரம், சத்தியம் ஆகும். அதுமட்டுமே என்றும் அழிவில்லாதது. அந்த சத்தியமான சித் (அறிவு) மட்டும்தான் பரமாத்மா ரூபமான ஆத்மா. அதுதான் நமது உண்மையான சொரூபம். அதுதான் காசி மாநகரம். இந்த காசி மாநகரத்தை தரிசிப்பதுதான் நமது இலட்சியமாகிய இருக்க வேண்டும்.

அதைவிடுத்து, மனதிலே உண்மையைப் போல தோன்றும், இந்த பிரபஞ்ச காட்சிகளெல்லாம், உருவங்களெல்லாம், அந்த அறிவு (பரமாத்மா) இருப்பதினாலே, இந்த மனதிலிருந்து உருவானதுதான்.

மனதில், அவைகள் எப்படி உருவாயிற்று?

மனம் என்பது, அந்த தூய அறிவின் (ஆத்மாவின்) பிரதிபிம்பம் ஆகும். அதாவது, உபாதியாகிய உடல் உண்டானால், அங்கு அந்த அறிவு பிரகாசிக்கும்போது, அது மனம் என்பதாக கூறப்படுகின்றது.

இதை, எப்படி புரிந்துக் கொள்ளலாமெனில், ஒரே ஒரு சூரியன் மட்டுமே இருக்கின்றது. அது தன்னில் தானாய் சுயம்பிரகாசமாக இருக்கின்றது.

அப்படிப்பட்ட சூரியன் மூலம், மழை உருவாகி, மழை நீர் பூமியில் உள்ள குளம், குட்டைகளில் நிரையும்போது, அந்த் நீரிலேயும் சூரியன் இருப்பதாகத் தெரிகின்றது. ஆனால், உண்மையில் நீரில் இருக்கும் சூரியன் உண்மையல்ல. அது அந்த உண்மையான சூரியனின் பிரதிபிம்பம்.

அதுப்போல, ஆத்மாவிலிருந்து வெளிப்பட்ட பஞ்ச பூதங்களின் வாயிலாக உண்டான உடல்களின் மூலம், அந்த ஆத்மாவாகிய அறிவு பிரதிபிமித்து, பிரகாசிக்கின்றது. அதைத்தான் மனம் என்கிறோம்.

அத்தகைய, மனதின் மாயா சக்தியினால் உண்மை போலத் தெரியும் கற்பனைகளும், அதில் உணரப்படும் அசையும், அசையா உருவங்களாக விளங்கும் வெளி உலகங்களும், (அவற்றின் அனுபவங்களாக) அத்துடன், மனதுள் விரியும் உள் உலகங்களும் அந்த அறிவகிய பரமாத்மா இருப்பதினால்தான், இந்த மனதின் மூலம் அறியப்படுகின்றன.

ஆனால், அறிவு (பரமாத்மா) மட்டும்தான் உண்மை. அந்த பராத்மாவே ‘நான்’ என தன்னைக் கூறிக் கொள்ள முடியும். ஆனால், அதை அறியாத மனம், தன்னுடைய அறியாமையினாலே, தன்னை “நான்” என்று கருதுகின்றது.

அதனால், அது படைத்துக் கொள்கின்ற உருவங்களை எல்லாம், தனக்கு வேறாகக் கருதிக் கொள்கின்றது. ஆனால், உண்மையில், அந்த அறிவு இருப்பதினால்தான் இந்த மனம் இருக்கின்றது என்பதை, அறியும்போது, மனமும், அறிவும் ஒன்றே. அதாவது, ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றே. அதுவே சத்தியம்.

அதாவது, மாறாது எப்போதும் சுயமாக ஒளிர்நது கொண்டு விளங்குவது அறிவு. அதுவே, சித் அல்லது முழுமையான நிச்சயித்த அறிவு. அது ஸுகம் அல்லது பேரின்பநிலை. அதுவே, சத்சிதானந்தம்.

அதாவது, இருப்பு(சத்), அறிவு(சித்) மட்டுமே என்று உணரப்படும்போது, அங்கு உண்டாவது ஆனந்தம் மட்டுமே. அதுவே, சத்சிதானந்தம் ஆகும். (அறிவு தன்னொளி பரப்பி யாவற்றையும் உயிர்ப்பித்து இருக்கும், ஆன்மாவாகத் தன்னை உணர்ந்து கொண்டதன் பயனால்) ஆத்மாவாகிய நானே (ஒளி மயமான) காசி நகரம்.

இந்த சுலோகத்தின் வாயிலாக, அத்வைத தத்துவத்தின் சாரமான வேதத்தின் மகாவாக்கிய உபதேசத்தை பகவான் ஸ்ரீஆதிசங்கரர் வலியுறுத்துகின்றார்.

**அவைகள், "பிரம்மம் சத்தியம்! ஜகத் மித்யா!"**

அதாவது, பிரம்மம் ஒன்றே சத்தியம், ஜகம் மித்தியை ஆகும். அதாவது, பரம்பொருளான பிரம்மம் ஒன்றே எப்போதும் நிலைத்து விளங்குவது. அதனால் அது '**சத்தியம்**'. மற்றவைகள் எல்லாம் மாறிக் கொண்டிருக்கின்ற உலகங்கள். அம்மாற்றம் '**மித்தியை**' அழியக்கூடியவைகள்.

இந்த உலகங்கள் இருவகை. வெளியில் தெரிகின்ற உலகங்கள் ஒரு வகை, நம் ஒவ்வொருவருடைய மனதிலும் அனுபவித்து உணர்கின்ற உலகங்கள் ஒருவகை.

வெளி உலகங்களில், அசையும் உடல்களான உயிரினங்களும், அசையாத உடல்களான பொருட்களும் விளங்குகின்றன. இவைகள் எல்லாம் பிறந்தும், வளர்ந்தும், தளர்ந்தும், சிதைந்தும் மாறிக் கொண்டே இருக்கின்றன.

இந்த வெளி உலகங்களைப் பார்த்து, அதனால் பலவித அனுபவ நிலைகளைத் தன்னுள்ளேயே ஏற்படுத்திக் கொண்டு, அதன்வாயிலாக, நாமெல்லாம் நம் மனதுக்குள் வேறு வகையான கற்பனை உலகங்களையும் படைத்துக் கொள்கிறோம்.

அதனாலேதான், ஒரே வெளி உலகத்தை, நாம் ஒவ்வொருவரும் அவரவர்கள் மனதிற்கு ஏற்றவாறு, வெவ்வேறு விதமாகப் பார்க்கிறோம்.

மாற்றம் என்பது இருக்க வேண்டும் என்றால், அது மாறாத ஒன்றின் மீதுதான் நடந்தாக வேண்டும். அது எப்படியெனில், அசையாத தண்டவாளத்தில் ரயில் பெட்டிகள் அசைந்துக் கொண்டு பயணிப்பதுப் போல, அல்லது அசையாத திரையின்மீது, அசைகின்ற உருவங்களைக் காண்பதுப் போல எனலாம்.

ஆகவே, அது மாற்றமில்லாத ஒன்றாக இருக்க வேண்டும். அதுதான் அறிவு. அந்த் அறிவின்மீது, இந்த மனம் ஏற்றி வைக்கப்பட்டு, இந்த வெளி, உள் உலகங்கள் எல்லாம், சத்தியமான பிரம்மத்தைச் அடிப்படையாகக் கொண்டே மாறுகின்றன.

அவ்வாறு மனதினால் அனுபவிக்கப்படுகின்ற இந்த உலகங்கள் எல்லாம், பிரம்மத்தினுடைய விளக்க முடியாத மாயா சக்தியாகிய மனதினால், கற்பனையாகப் படைக்கப் பட்டவைகள் என்பதே ‘பிரம்மம் சத்தியம்! ஜகம் மித்தியா!’ எனும் அத்வைத சித்தாந்தம் ஆகும்.

ஆகவே நிஜ ஸ்வரூபமாகிய சத்சிதானந்தனை பரமனை, பரமாத்மாவை, காசி நகரத்தை தரிசிப்பது, உணருவதுதான் நமது வாழ்வின் இலட்சியமாகிய இருக்க வேண்டும்.

## சுலோகம் 3

पञ्चस्वधिराजमाना
बुद्धिर्भवानी प्रतिदेहगेहे ।
साक्षी शिवस्सर्वगणोऽन्तरात्मा
सा काशिकाऽहं निजबोधरूपा ||३||

**கோஸேஷு பஞ்சஸ்வதி$_4$ ராஜமானா**
**பு$_3$த்$_3$தி$_4$ர் ப$_4$வானீ ப்ரதி தேஹ கேஹே |**
**ஸாக்ஷி சிவஸ்ஸர்வ கணோ(அ)ந்தராத்மா**
**ஸா காசிகா(அ)ஹம் நிஜ போ$_3$த$_4$ரூபா || 3||**

Koseshu pancha swadhi rajamana,
Budhir bhavani prathi deha geham,
Sakshi shiva sarva ganontharathma,
Saa kasikaham nija bodha roopa. || 3 ||

## பொருள்

பஞ்ச கோசங்களில் பிரதானமான விஞ்ஞானமய கோசத்தில் கொலுவீற்றிருக்கிறாள் அன்னை பவானி. இது எல்லா உயிரினங்களுக்கும் பொருந்தும். விஞ்ஞானமய கோசம்தான் அன்னை பவானியின் வீடு. அந்த உடலென்னும் வீட்டில் உயிரினங்களுக்கு சாட்சி மாத்திரமாக, சிவன் அல்லது பரமாத்மா அந்தராத்மாவாக வீற்றிருக்கிறது. காசி மாநகரம் அப்படிப்பட்ட ஆத்மாவின் சுய ரூபமே!

## விளக்கவுரை

'**நான்**' **யார்**? என்ற கேள்விக்கு பதிலளிக்கும் வகையில், பகவான் ஸ்ரீஆதிசங்கரர் இந்த சுலோகத்தை அமைத்துள்ளார். நம் – எல்லா உயிரினங்களின் உடல்கள் ஐந்து வித கோஷங்கள் என்னும், உறைகளால் உருவாகியுள்ளது.

அவைகள், அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் ஆகும்.

உண்ணும் உணவினால் மட்டுமே உண்டாகி, உணவு உட்கொள்வது நின்றவுடன் வீழ்கின்ற உடல் அன்னமய கோசம் எனப்படுகிறது.

வெறும் உடல் மட்டும் இருந்து விட்டால், ஜீவன் உயிர் வாழ முடியாது. அதற்கு பிராண வாயு தேவை. அது பிராணமய கோசம். அதாவது, மூச்சுக்காற்று நின்று விட்டால் உடல் பிணமாகி விடுகிறது. அதேசமயம், உடலும், உயிரும் இருந்து, ஒருவன் கோமா நிலையில் இருந்தாலும் பயன் ஒன்றும் இல்லை என்பதினால், அவனது இயக்கத்துக்கு தேவையான மனம், புத்தி என்ற மனோமய கோஷமும், விஞ்ஞானமய கோஷமும் தேவைப்படுகின்றது.

அதேசமயம், மனம் ஒரு குரங்கு. அதற்கு எதை எப்பொழுது செய்ய வேண்டும் என்று தெரியாது. அதை வழி நடத்திச் செல்லும் சாரதி தான் புத்தி சக்தியாகிய விஞ்ஞான கோஷம்.

அத்தகைய இந்த நான்கு கோஷங்களும் இருப்பதை கடந்து, ஒருவன் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் பொழுது, அவனால் ஆனந்தத்தை அனுபவிக்க முடிகிறது என்பதினால், அந்த நிலையை ஆனந்தமய கோசம் என்கிறோம்.

இதிலே, இந்த ஆனந்தமய கோஷம் என்பது, காரண உடல் எனப்படுகின்றது. அதாவது, ஸ்தூல உடலாகிய பரு உடல் உண்டாவதற்கும், சூக்கும உடலாகிய மனோ உடல் உண்டாவதற்கும் காரணமாக இருப்பது, காரண உடல் ஆகும்.

இவைகளில் முக்கியமானது ஆனந்தமய கோசம் என்னும் காரண உடல் அழியாமல், மற்ற இரண்டு உடல் களும் அழியவே அழியாது. அதாவது, அவைகள் மீண்டும், மீண்டும் சூக்கும், ஸ்தூல உடல்களுக்கு வந்து, போய் கொண்டே இருக்கும். அதாவது, மனோ உடல், பௌதீக உடல் என பிறப்பு – இறப்பு சக்கரத்தில் சுற்றுகின்றன.

இந்த சக்கரம் நிறுத்தப்பட வேண்டுமானால், ஆனந்தமய கோஷம் என்ற காரண உடல் என்பது, சஞ்சித கர்மா என்றும் அறிய வேண்டும். நாம் பல்வேறு பிறவிகளாக உண்டாக்கிக் கொண்ட பாவ, புண்ணியங்கள் என்ற செயல் விளைவுகள் எல்லாம் ஒட்டுமொத்த "**சஞ்சிதகர்மா**" என்பதாக காரண உடலில் குடி கொண்டுள்ளது. அதை அவ்வளவு எளிதாக அறிய முடியாது என்பதினால், அதை சாஸ்திரம் "**அநிர்வசனீயம்**" என்று அழைக்கின்றது.

ஆகவே, ஆனந்தமய கோஷமாகிய, காரண உடலை கழிக்க வேண்டுமானால், அதற்காக உள்ள விஞ்ஞானமய கோஷம் என்ற புத்தி சக்தியை வலுப்படுத்த வேண்டும். அந்த விஞ்ஞான கோஷம் என்பது மனதை வழி நடத்திச் செல்கின்ற பவானி என்கின்றார் பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர்.

அந்த சர்வ சக்தி வாய்ந்த பவானியின் உதவியின்றி நாம் நம்மில் எப்பொழுதும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் அறிவை (பரமாத்மனை) அறிய முடியாது.

அந்த விஞ்ஞானமய கோஷமாகிய புத்தி சக்தியானது, மனதின் அறியாமையினால், தன்னை இந்த அழியும் உடலாகக் கருதிக் கொண்டிருக்கும்வரை, அதாவது, இந்த உடலை, 'நான்' என்று அறிவுறுத்திக்கொண்டிருக்கும் வரை ஞானம் பிறக்காது.

விஞ்ஞானமய கோசத்தின் வழிகாட்டுதலின்படி மனோமய கோசமும், பிராணமய கோசமும், அன்னமய கோசமும் சேர்ந்து நடத்தும் விளையாட்டுக்கள்தான் பிரபஞ்சம் எனும், இந்த உலக வாழ்க்கை ஆகும்.

என்று இந்த விஞ்ஞானமய கோஷமாகிய புத்தி சக்தி, விழித்துக்கொண்டு, மனதிற்கு சரியான வழியை காண்பிக்க ஆரம்பிக்கின்றதோ? அந்த விநாடியில், இந்த உடல்தான் 'நான்' என்ற எண்ணம் அழிந்துவிடும். அடுத்து, உண்மையான ஞானம் பிறக்கும்.

அப்பொழுது மட்டுமே, அந்த ஆனந்தமய கோஷத்தில் இருக்கும் அறியாமை என்ற விதை எரிக்கப்படும்.

அதாவது, ஆறிவாக, ஆன்மாவாக, சாட்சியாக வீற்றிருக்கும் சிவனை – பரமனை – அந்த காரண உடலில் மனம் கண்டு கொள்கின்றது. அவ்வாறு, மனம் தன் மூலத்தைக் கண்டு கொண்ட மறுவிநாடி, தன் தனித்துவத்தை இழந்து விட்டு, இருப்பதெல்லாம் இறைவனே! என அந்த அறிவிடம் தன்னை ஒப்படைத்து விடுகின்றது.

அதுதான், ஆத்ம சாக்ஷாத்காரம்.

ஆக, அந்த பரமன் வெறும் சாட்சி தானென்றாலும், அவனே பரமானந்தத்தைத் தருகிறான். அந்த உண்மையான "நான்"தான் – நிஜபோதரூப சொரூபம்தான்– காசிமாநகரம். அதை தரிசிப்பதுதான் நமது வாழ்வின் இலட்சியம்.

ஆகவே, முதல் நான்கு கோஷங்களில் எதுவும் நிஜமான ‘நான்’ ஆக இருக்க முடியாது. அதாவது, அன்னமய கோசம் என்பது, வெறும் உணவுப்பிண்டம். ஆகவே, இந்த பௌதிக சரீரம் 'நான்' ஆக இருக்க முடியாது.

அதாவது, என்னை நானே எப்படி பார்க்கமுடியும்? கண்ணை கண்ணே பார்க்க முடியுமா? முடியாது அல்லவா?

ஆனால், நாம் இந்த உடலைக் காண்கிறோம். அடுத்தவர்களைப் பார்த்து, ’என்ன உடம்பு சரியில்லையா? என்னவோ மாதிரி இருக்கிறாய்?’ என்று கேட்கிறோம். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், இந்த உடல் வேறு, ‘நீ’ அல்லது ‘நான்’ என்பது வேறு என்பது புரியும்.

அடுத்து, மனோமய கோஷத்தின் மூலம் இந்த உடல் செய்யும் செயல்களைக் கடந்து, இந்த உடல் ஓய்வில் உறங்கும் பொழுது, நாம் கனவு காண்கிறோம். உறக்கத்திலிருந்து விழித்து எழுந்திருக்கும் பொழுது, உறக்கத்தில் கண்ட கனவுகளை நினைவு கூறுகிறோம். ஆகவே மனோமய கோஷத்திலிருந்து வேறாக ‘நான்’ என்று ஒன்று இருப்பது தெரிகிறது.

அவ்வாறே, விழிப்பு நிலையில் செய்கின்ற கர்மங்களை ‘நான்’தான் செய்கிறேன் என்ற கர்த்துருத்துவ பாவம்தான் விஞ்ஞானமய கோஷம். ஆகவே, அதுவும் நான் அல்ல.

ஆனால், எல்லாவற்றிற்கும் சாட்சியாக இருப்பது அந்த பரமன் ஒருவன்தான். பரமாத்மா ஒருவன்தான். அவன் ஒன்றும் செய்வதில்லை. எந்தவித மாற்றங்களுக்கும் ஆட்படுவதும் இல்லை. காசி மாநகரமும் அதுப்போல, எல்லாவற்றிற்கும் சாட்சியாக நிலை கொள்கிறது. பரமனே காசி, காசியே பரமன் என்கிறார் பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர்.

## சுலோகம் 4

काश्यां हि काशते काशी
काशी सर्वप्रकाशिका।
सा काशी विदिता येन
तेन प्राप्ता हि काशिका ॥४॥

**காஸ்யாம் ஹி காஸ்தே காசி**
**காசி ஸர்வப்ரகாசிகா|**
**ஸா காசி விதிதா யேன**
**தேன ப்ராப்தா ஹி காசிகா || 4||**

Kasyam hi kasathe kasi
kasee srava prakasika,
Sa kasi viditha yena
thena praptha hi kasika. || 4 ||

## பொருள்

இவ்வுடலே உண்மையில் காசி. (இதில்) ஒளிர்கின்ற ஆன்மாவே காசி. அனைத்தையும் ஒளிமயமாக்கும் காசியாகிய பரமாத்மாவும் அதுவே. இந்த உண்மையை எவரால் உணரப்படுகிறதோ? அவருக்கே, முக்தி அல்லது விடுதலை. அந்த முக்தியே காசி.

## விளக்கவுரை

காசி என்றால் பிரகாசிக்கின்ற ஒன்று என்று பொருள். காசி நகரத்தை சுவர்ணபுரி என்றும் கூறுவார்கள். ஸ்வர்ணம் என்றால் தங்கம். தங்கம் பிரகாசமாக ஒளிவீசிக் கொண்டு இருப்பதுப்போல, காசி என்றால், ஒளி பொருந்தியது என்று பொருள்.

அந்த ஆத்மாவே காசி. அத்தகைய ஆத்மா இந்த உடல் எனும் நகரத்தில், குடி கொண்டு, இந்த உடலை புலன்கள் வாயிலாக பிரகாசிக்க வைக்கின்றது. எப்படி?

இந்த உடலும், அந்த காசி நகரம் போல் ஒளிர்கிறது. அதனாலேயே அதனால் கர்மங்களை செயல்படுத்த முடிகிறது. கண்களுக்குத் தன் ஒளியால், தனக்கு வெளியிலுள்ள பொருட்களை பார்க்க முடிகிறது. காதுகளுக்குள்ள ஒளியால் ஒலிகளைப் கேட்டுப் புரிந்துக்கொள்ள முடிகிறது. உடலை போர்த்தியுள்ள தோலுக்குமுண்டு ஒளி. ஆகவேதான் நம்மை யாராவது, அல்லது ஏதாவது தொட்டால், அது இன்னதென்று உணர முடிகின்றது. அவ்வாறே, நாவிற்கும் உண்டு ஒளி.

அந்த ஒளியால் ருசிகளை அறிகிறோம். நாசியின் ஒளியால் மணத்தை அறிகிறோம். ஆக, நம் உடலே ஒளிமயமாக உள்ளது. இந்த ஒளிமயமான உடலில் இருக்கும் ஆத்மாவே காசி.

அந்த ஆத்மா இல்லையென்றால், நம் உடல் ஒன்றுக்கும் உதவாது. ஆகவே, அந்த ஆத்மாவே உடலுக்கும், அதன் அவயவங்களுக்கும் ஒளி நல்குகின்றது. அந்த உடலில் இருந்து உயிர்த்தும், ஒளிர்ந்தும் விளங்கும் ஆன்மாவே காசி.

அந்த ஆன்மாவே அறிவாக (அ) உணர்வாக இருந்து, அனைத்து உடல்கள் மற்றும் மனதின் வாயிலாக பிரகாசிக் கின்றது. அஹம் பிரம்மாஸ்மி, தத்வமஸி என்ற மகாவாக்கிய தத்துவங்களை, இந்த சுலோகத்தின் வாயிலாக, பகவான் ஸ்ரீஆதிசங்கரர் மீண்டும் வலியுறுத்துகிறார்.

இந்த உண்மையைப் புரிந்து, தன்னுள் உணர்ந்து கொள்பவர் எவரோ? அவரின் ஆன்ம ஞானமாகிய அறிவு ஒளியே காசி. அந்த ஞான ஒளியைக் கண்டவர் ஆத்ம சாக்ஷாத்காரம் அடைந்தவர். அவர்கள் காசியாகி விடுகிறார்கள்.

ஆத்ம சாக்ஷாத்காரம் எனும், ஞான ஒளியாகி விட்டவர்கள், அந்த ஒன்றேயாகிய அறிவுடன் அப்படியே லயித்து விடுகிறார்கள்.

அவர்களுக்கு பிறப்பு – இறப்பு எனும் சக்கர சுழற்சியிலிருந்து விடுதலை கிடைத்து விடுகிறது. அந்த விடுதலையே காசி. அதனை உணர்பவர் எவரோ? அவரே முக்தி என்னும் காசியினை அடைந்தவர் ஆவார்.

அதற்கு ஆயிரமாயிரம் மைல்கள் பயணம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அது இருக்கின்ற இடத்திலேயே காசியை அடைய முடியும்.

இவ்வாறு, உடலாகிய கருவி, பகுத்தறியும் விசையாகிய புத்தி சக்தி, ஆன்ம ஒளியான சாட்சி, ஆன்மாவே அனைத்துமான பரம்பொருள் எனும் பேருண்மை, அவ்வுண்மையை உணர்வதால் அடையும் முக்தி.

இவ்வாறு, உடல் – கருவி, மனம் – அறிவு, ஆன்மா – சாட்சி எனக் கைக்கொள்ளும் ஞானம் ஒன்று மட்டுமே, முடிந்த முடிவான பயன் என்றும், அதுவே, காசி என்றும், பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் இந்த சுலோகத்தின் மூலம் அறிவுறுத்துகின்றார்.

இப்படி நம்முள்ளேயே காசி இருக்கும்போது, அந்த அறிவாகிய பரமாத்மன் வசிக்கும்போது, நம்மால் அந்த பரமனை காசியை ஏன் அவ்வளவு எளிதாக பார்க்க முடியவில்லை?

அதற்குக்காரணம், ஆசாரியர் ஸ்ரீ சங்கரர் ஏற்கனவே கூறியதுபோல, நமது மனோவிருத்திகள் விளைவிக்கும் இந்திரஜாலம்தான் என்பதை அறிய வேண்டும்.

பொதுவாக, மனதின் அறியாமையினால், நாம் நம்முள் இருக்கும் பரம சத்தியத்தை மறந்துவிட்டு, நமக்கு அன்னியமான, தேவையற்ற விசய, சுகங்களாகக் கருதப்படும் பொருட்களின் மீது அபிமானம் கொண்டு, தன்னுடைய

உண்மையான, நிஜபோதரூப ஸ்வரூபமாகிய காசியை காண இயலாமல் போவதற்கு காரணம் ஆகும்.

ஆகவே, அத்தகைய அறியாமைகளாகிய ஆசைகளை அழித்து விட்டால், நாம் எளிதாக காசியை அடைந்து விடலாம். அதற்கு, காசி என்ற ஊருக்கும் செல்ல வேண்டியதில்லை. அங்கே உள்ள ஹரிச்சந்திர காட் என்ற படித்துறைக்கும் செல்ல வேண்டியதில்லை. அத்துடன் இறந்த உடல்களை எரித்து, கங்கையில் கரைக்கும் மணிகர்ணிகா படித்துறைக்கும் போக வேண்டிய அவசியம் இல்லை.

## ஸ்லோகம் 5

---

काशीक्षेत्रं शरीरं त्रिभुवनजननी व्यापिनी ज्ञानगंगा
भक्तिः श्रद्धा गयेयं निजगुरुचरणद्ध्यानयोगः प्रयागः।
विश्वेशोऽयं तुरीयः सकलजनमनः साक्षिभूतोऽन्तरात्मा
देहे सर्वं मदीये यदि वसति पुनः तीर्थमन्यत्किमस्ति ॥५॥

**கா*ஶீ*க்ஷேத்ரம் *ஶ*ரீரம் த்ரிபு$_4$வனஜனனீ வ்யாபினீ ஜ்ஞானக$_3$ங்கா$_3$**
**ப$_4$க்தி: *ஶ*ரத்$_3$தா$_4$ க$_3$யேயம் நிஜகு$_3$ருசரணத்$_3$ த்$_4$யானயோக$_3$: ப்ரயாக$_3$:|**
**வி*ஶ*வே*ஶோ*(அ)யம் துரீய: ஸகலஜனமன: ஸாக்ஷிபூ$_4$தோ(அ)ந்தராத்மா**
**தே$_3$ஹே ஸர்வம் மதீ$_3$யே யதி$_3$ வஸதி புன: தீர்த$_2$மன்யத்கிமஸ்தி || 5||**

Kasi kshethram sareram tribhuvana janani vyapini jnana ganga,
Bhakthi sradha gayeyam nija gurucharana dhyana yoga prayoga,
Vishwesoyam thureeya sakala jana mana sakshi bhoothontharathma,
Dehe sarvam madheeye yadhi vasathi punastheertha anyath kimasthi.
|| 5 ||

**<u>பொருள்</u>**

(எனது) உடலே காசி நகரம். மூவுலகத்திலும் நிறைந்து விளங்கும் அன்னையாகிய கங்கை (என்னுள் இலங்கும்) உயர்ந்த அறிவு.

அறியாமை என்ற அழுக்குகளை நீக்கும் ஞானமே கங்கை ஆகும். அத்தகைய ஞான கங்கையை அடைய வேண்டுமானால், அதற்கான பக்தியும், சிரத்தையும் அவசியம்.அ அதுவே கயா எனும் புனித இடம் ஆகும். நல்வழிகாட்டும் சத்குருவின் திருவடிகளில் சரணடைவதே பிரயாகை ஆகும்.

விழிப்பு, கனவு, உறக்கம் எனும் மூன்று அனுபவ உலகங்களையும் தாண்டிய துரீயமெனும் நிலையிலிருந்து, அனைத்திற்கும் சாட்சியாக இருந்துவரும் ஆன்மாவே, காசி விஸ்வநாதப் பெருமான்.

இவ்வாறாக, என் உடலிலேயே எல்லாமுமாக இருப்பதால், புண்ணிய யாத்திரைகள் என்று, வேறு எந்த இடத்திற்கு நான் போக வேண்டிய அவசியம் ஏது உள்ளது?

**விளக்கவுரை**

இப்பாடலிலே பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர், ஆத்ம சாக்ஷாத்காரம் அடைந்துவிட்ட ஒருவனுக்கு, காசி, கயா, பிரயாகை போன்ற புனிதத்தலங்களை தரிசிக்க வேண்டிய அவசியம் என்றுமே கிடையாது என்று உறுதியாக கூறுகிறார்.

ஏன் இப்படி கூறுகிறார்?

இந்த மூன்று இடங்களும் இந்து மத நம்பிக்கையின் அடிப்படைத் தூண்களல்லவா? 'ஆதிசங்கரரே இப்படிக் கூறலாமா?' என்று நம்முள் கேள்விகள் எழலாம்.

பொதுவாக, கவிதைகள் எழுதும்போது, அதிலே, 'வஞ்சப் புகழ்ச்சி அணி' அல்லது நிந்தா ஸ்துதி என்றொரு முறை உண்டு.

அதாவது, ஒருவரை புகழ்வதுப் போல, இகழ்வதும், அல்லது இகழ்வதுப் போல புகழ்வதும் இலக்கணத்தில் வஞ்சப்புகழ்ச்சி அணி என்பார்கள்.

இங்கே, பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் இகழ்ந்து கூறுவதுப் போல இருந்தாலும், உண்மையில் காசியின் மகத்தான பெருமைகளை அனைவருக்கும் வலியுறுத்திக் காட்டவே

அவ்வாறு கூறுகின்றார் என்பதை நாம் அறிய வேண்டும். அந்த முறையில் இயற்றப்பட்டதுதான் பகவன் ஸ்ரீஆதிசங்கரரின் இந்த காசிபஞ்சகம் ஆகும்.

அதாவது, நமது உடலே காசி மாநகரமாகவும், அந்த நகரத்தில் பெருக்கெடுத்து ஓடும் கங்கை நதியே புத்தி என்பதாகவும், அந்த புத்திசக்தி என்னுள் பொங்கிக் கொண்டு இருக்கின்ற பொழுது, பக்தியும் அசையாத நம்பிக்கையும் தளும்பி வழியும் என் மனமே கயா எனும் புண்ணிய தீர்த்தமாகவும் இருக்கும் பொழுது, கங்கை, யமுனை, சரஸ்வதி என்ற மூன்று நதிகளும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமமாகிய பிரயாகை எனும், நாம் செய்யும் குரு சேவையாக இருக்கும் பொழுது, அவைகளுக்கெல்லாம் சாட்சியாக அந்த அறிவே என்னுள் ஆத்மாவாக வீற்றிருக்கும் பொழுது, நாம் ஏன் மற்ற புண்ணிய தீர்த்தங்களை தேடிப் போக வேண்டும்? என்று ஸ்ரீ ஆதிசங்கரர் கேட்பதுப் போன்று அமைந்துள்ளது இந்த பாடல்,

உடலே காசி. காசியில் கரை புரண்டோடும் கங்கை மூவுலகங்களிலும் – சுவர்க்கத்திலும், பாதாளலோகத்திலும், பூமியிலும் – ஓடிக்கொண்டிருக்கிறாள். .அவளை சுவர்க்க லோகத்தில் மந்தாகினி என்றும் அழைக்கிறார்கள்.

அதுப்போல, ஞான கங்கை நம் ஜாக்ரத், சொப்ன, சுஷுப்தி மூன்று அவஸ்தைகளிலும் நம்மில் பிரவகித்துக் கொண்டிருக்கிறாள்.

அவ்வாறே, பக்தி சிரத்தையுடன் முன்னோர்களுக்கு சிரார்த்தம் செய்யுமிடம் கயா. அதுப்போல, பக்தியுடனும், சிரத்தையுடனும் ஞானத்தை பேணுவது கயை என்னும் இடத்தில்தான். அந்த கயை நம்முள்ளேதான் இருக்கிறது.

பிரயாகை அல்லது திரிவேணி சங்கமம் கங்கையும், யமுனையும், சரஸ்வதியும் சங்கமிக்கும் இடம். கங்கையே விழிபுணர்வு. அதுவே, அறிவு. யமுனை அதனைச் சார்ந்த கனவுலக அறிவு. கண்ணுக்குத் தெரியாத ஸரஸ்வதி ஆழ்துயில் அறிவு.

அதாவது, நம்முடைய மூன்று அனுபவ நிலைகளும் (விழிப்பு, கனவு, ஆழ்துயில்) மூன்றும் ஒன்றாய் இருக்கும் நிலையைத்தான், திரிவேணி சங்கமம் குறிக்கின்றது. அதுதான், துரீயாதீத நிலை.

அத்தகைய நிலை வருவது மிகவும் அரிது. அதற்கான தவமும், சமாதி எனும் மனமற்ற நிலையும் எய்தினால்தான், நம்முடைய இந்த மூன்று உலகங்களும் ஒன்றாகும் நிலை கிடைக்கும்.

அப்படிப்பட்ட அனுபவம், நமக்கு வெளியே எங்கும் கிடைக்கப் போவதில்லை. அது மனத் தூய்மையாலும், வைராக்கியத்தினாலும், விடாமுயற்சியினாலும், 'நான்யார்?' என்று தன்னை விசாரித்து அறிவதினாலும்தான் கிடைக்கிறது.

ஆகவே, பிரயாகையும் நம்முள்ளேதான் இருக்கிறது. இதற்கெல்லாம் சாட்சியாக வீற்றிருக்கும் காசி விசுவநாதன் ஆத்மாவாக நம்முள்தான் வீற்றிருக்கிறார்.

அவரது சரணங்களில் பக்தி சிரத்தையுடன் மனதை ஒப்படைத்து, வணங்கினால் – ஆத்ம சாக்ஷாத்காரம் – உண்டாகி, நமக்கு முக்தி கிடைத்து விடும்பொழுது, வேறு எங்கு வெளியே செல்ல வேண்டும்?

இந்த உடல் அழியக்கூடியது என்றாலும், உடல் என்பது ஆன்மா வசிக்கும் வீடானதால், அவ்வுடலைத் தூயதாக வைத்துக் கொள்வது மிகவும் அவசியம்.

காசியை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார் பகவான் ஸ்ரீஆதிசங்கரர்.

அந்த அழியக்கூடிய காசி என்ற உடலில்தான் அழியாத அறிவாகிய விமல கங்கை இருப்பதினால், அத்தகைய ஞானம் தங்கும் நம் மனதை தூய்மையுடன் பேணிக்காப்போம்.

மேலும், கயையில் போய் எந்த அளவுக்கு பக்தியுடனும், சிரத்தையுடனும் இறந்தவர்களுக்கு சிரார்த்தம் செய்வோமோ? அதே சிரத்தையுடனும், பக்தியுடனும் நம்முள் வசிக்கும் விஷ்வேஸ்வரனை (ஆத்மாவை) வணங்குவோம்.

இது விழிப்பு, உறக்கம், ஆழ்துயில் ஆகிய மூன்று நிலையிலும் தொடரட்டுமே. அப்படிச் செய்வதினால்தான் நாம் சத்தியத்தை கண்டறிய முடியும். அனைத்திலும், வியாபித்து உள்ளவன் பரமன் என்பதினால், எதினிடமும் விருப்பு வெறுப்புக்களுக்கு இங்கு இடமே கிடையாது என்பதையும் உணருவோம்.

--------

# நிறைவுரை

காசிபஞ்சகம் என்ற இந்த ஐந்து சுலோகங்களிலும் உள்ளடங்கியிருக்கும் கருத்து 'நானே பிரம்மம், எல்லோரும் பிரம்மம்' என்பதே. இந்த உடலே 'நான்' என்ற அறியாமையைத் துறந்து, 'நான்' என்பது உள்ளிருக்கும் பரமன்தான், என்பதை அறிய ஜாக்ரத், சொப்ன, சுஷுப்தி ஆகிய மூன்று நிலைகளிலும் பக்தி சிரத்தையோடு முயற்சிக்க வேண்டும்.

உண்மையில், காசி விஸ்வநாதன் நம்முள் வெறும் சாட்சி மாத்திரமாகவே வீற்றிருக்கிறார். ஆகவே, நம்முடைய செயல் விளைவுகளுக்கு நாம் மட்டுமே பொறுப்பு. அதனால் அவர் என்றுமே பாதிக்கப்படமாட்டார்.

பொதுவாக, நாம் செய்யும் செயல்கள் நம்முடைய உடல், மனம் மட்டுமன்றி, மற்றவைகளின் உடலையும், மனதையும் பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நமது கவனமெல்லாம் 'நான் யார்?' என்ற ஞானம் பெறுவதிலேயே இருக்க வேண்டும்.

நமது பக்தியையும், சிரத்தையையும் பரமனுக்கு அர்ப்பணித்துவிட்டு, அந்த ஞான கங்கையைத்தேட வேண்டும். அதுதான் முக்திக்கு ஒரே வழி.

அதுமட்டும் சாத்தியமாகிவிட்டால், புறத்திலே உள்ள தீர்த்த யாத்திரைகளுக்கும், பூஜை – புனஸ்காரங்களுக்கும் வேலையே இல்லை.

ஆக, 'நான் யார்?' என்று, நம்மை நாமே விசாரித்து, விடைக்காணும் முயற்சியில் உண்டாகும், உயரிய ஞானமே முக்தி. அந்த அறிவு கிடைக்கும்போது, மாயையில் மயங்கும் மனதிற்கு விடுதலை உண்டாகி விடுகின்றது. அத்தகைய தூய மனதினைக் கொண்டுதான், நாம் தூய அறிவிடம் இரண்டறக் கலந்து விடமுடியும்.

அவ்வறிவினைப் பெறுவதற்கு, 'சித்த சுத்தி' எனும் தெளிந்த மனதை, முறைதவறாமல் கரும யோகத்தினாலும், பக்தி யோகத்தினாலும் அடைய முயற்சி செய்ய வேண்டும். அத்தகைய, தூய மனதினை அடைந்தபிறகே, அழியாமல் அல்லல் படுத்தும் மனதின் அறியாமையாகிய 'நான்' எனும் ஆணவத்தை அழிக்கும் ஞான யோகத்தினைப் பெற முடியும். அந்த ஞானமாகிய மேலான அறிவே 'ஆன்மனை' அடையும் பாதை.

ஆன்மாவை அறிவது என்பதும், அதை அடைவது என்பதும் தவறான எண்ணங்கள். நம்மிடம் இல்லாத ஒன்றைத்தான் அடையமுடியும். நம்மிலிருந்து வேறான ஒன்றைத்தான் அறியமுடியும். அப்படி அடைவதும் அறிவதும் மீண்டும் கை நழுவிப் போகலாம். அல்லது மறந்து போகலாம்.

ஆகவே நான் யார்? என்பது அவைகள் இரண்டும் அல்ல. அடைவதும் அல்ல. அறிவதும் அல்ல. அது நம்மில் புதைந்து கிடக்கும் சத்தியத்தை உணருதல்.

அந்த சத்தியம் அஞ்ஞானம் அல்லது அவித்யையினால் மூடப்பட்டு, மேகங்கள் மறைத்த சூரியனை போன்றது. அந்த அழுக்குகள் நீங்கிவிட்டால், அந்த அஞ்ஞானம் அழிந்து விட்டால், சத்தியத்தை உணர முடியும்.

ஒருமுறை அந்த சாக்ஷாத்காரம் ஏற்பட்டு விட்டால், பரமனில் லயித்து விட்டோமென்றால், அதன்பிறகு, மனதின் பூரண விடுதலையே முக்தி என்பதாகும். பக்தியும், கர்மமும் அதற்கான ஏணிப்படிகள்தான். அவைகள் மட்டுமே, ஆத்ம சாக்ஷாத்காரத்திற்கு போதுமானதல்ல.


ஞானமார்க்கம் – அதற்கான விடாமுயற்சி மட்டும்தான் முடிவான வழி என்று காசி பஞ்சகம் என்ற இந்த நூலின் வாயிலாக சுட்டிக் காட்டப்படுகின்றது. அதைவிடுத்து, நேரடியாக காசியாத்திரை மேற்கொள்வதினால், ஒரு பயனும் உண்டாகப் போவதில்லை.

காசியாத்திரை வேண்டவே, வேண்டாம் என்று பகவன் ஸ்ரீ ஆதிசங்கரர் கூறவில்லை. காசியாத்திரை போன்ற புனித கர்மங்களின் பொருளைப் புரிந்துக்கொண்டு செயல் படுங்கள் என்றுதான் இங்கு கூறவருகின்றார்.

அதற்கான ஒரு விழிப்புணர்வை உண்டாக்கும் விதமாகத்தான், இந்த காசி பஞ்சகம் என்ற நூலை இயற்றியுள்ளார். ஆகவே, அனைவரும் இந்த நூலைப் படித்து, பயன்பெற வேண்டும்.

ஓம் தத் ஸத்!

# காசி பஞ்சகம்



ப்ரக்ஞன்